# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051880

1. District : சென்னை CHENNAI மாவட்டம் PS: DVAC HQrs காவல்நிலையம் Year: 2020 ஆண்டு FIR No.: 21 மு.த.அ. எண் Date: 17.12.2020 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: (Amendment Act 2018 Sections பிரிவுகள்: 7 & 13(1)(a)
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 15.12.2020 நாள் முதல் Date to : 16.12.2020 நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : 2100 Hrs நேரம் முதல் Time to : 1100 hrs நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.12.2020 Time நேரம் : 1000 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17.12.2020 Time நேரம் : 1000 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் South East 5 Kms
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி TASMAC Elite Shop NO: 715, NO. 40-41. Ravel building, velachery Velachery - Tambaram road, velachery
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் : Velachery ~~[illegible]~~ Chennai - 42.

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr C.K. Kumaran (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Deputy Inspection cell officer. (g) Address : முகவரி Chennai collectorate, Chennai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tr. K Rajkumar Supervisor,
   2. Tr. D. Shankar Addl Supervisor
   3. Tr. G Selvakumar. Salesman
   4. Tr. V. Ramraj Salesman
   5. Tr. G Venkatesan Salesman
   6. Tr. K. Krishnamurthy Salesman
   All working in TASMAC Elite Shop NO 715, Velachery, Chennai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   – NO delay –

9. Particulars of properties stolen / involved (Attach **separate sheet if necessary)**
களவாடப்பட்ட / **களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)**

(இருப்பு குறைவு) Deficit : Rs 86,760/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / **களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு**

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான **இறப்பு என் ஏதேனும் இருந்தால்**

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம் **(தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)**

FIR contents is enclosed in a separate sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / **Informant**
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

17.12.2020

**Signature of the Officer in-charge, Police Station**
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்**

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

**Name:** பெயர் S.SENTHILKUMAR
**Rank:** நிலை Inspector of Police No எண் ………
V&AC, SIC, Chennai-16

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண். 21/2020 பிரிவு 7, 13(1) (a) ஊழல் தடுப்புச் (திருத்தப்பட்டது) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12 ன் தொடர்ச்சி பின்வருமாறு.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு (1) ஆய்வாளர் சு.செந்தில் குமார் ஆகிய நான் 17.12.2020 அன்று காலை 10.00 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திருமதி.சி.கே.குமரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், சென்னை என்பவரிடமிருந்து பெற்ற புகார் மனுவினை திரு.வா.பாஸ்கரன், துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வுப் பிரிவு-1, சென்னை அவர்கள் மனுவை பரிசீலனை செய்து உத்தரவு பெற்று மனுவின் தன்மைக்கேற்ப வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய அறிவுறுத்தியதன் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண். 21/2020 பிரிவு 7, 13(1) (a) ஊழல் தடுப்புச் (திருத்தப்பட்டது) சட்டம் 2018_ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தேன், மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் C.K.குமரன், மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், சென்னை மாவட்டம், சென்னை-1. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. கடித எண்.அ1/216/2020 நாள் - 16.12.2020, அய்யா, பொருள்- இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-42, வேளச்சேரி, விஜய் நகர், வேளச்சேரி தாம்பரம் பிரதான சாலை, ரேவல் கட்டிடம் முதல் மாடியில் இயங்கி வரும், டாஸ்மாக் எலைட் மால் ஷாப் எண்.715ல் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை நாள் 15.12.2020 இரவு சுமார் 9.00 முதல் 16.12.2020 காலை சுமார் 11.00 மணி வரை - ஆய்வுக் குறிப்பு மேல்நடவடிக்கைக்காக அனுப்புதல் - தொடர்பாக. சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை 15.12.2020 இரவு சுமார் 21.00 மணி முதல் 16.12.2020 காலை சுமார் 11.00 மணி வரை சென்னை-42, வேளச்சேரி, விஜய் நகர், வேளச்சேரி தாம்பரம் பிரதான சாலை, ரேவல் கட்டிடம் முதல் மாடியில் இயங்கி வரும், டாஸ்மாக் எலைட் மால் ஷாப் எண்.715ல் மேற்கொள்ளப்பட்டது. கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மற்றும் பின்வரும் ஆவணங்கள் மேல்நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது, ஆவணங்களின் விவரங்கள் 1. பணியாளர் வருகைப் பதிவேட்டின் டிசம்பர் 2020 மாதத்திற்கான ஜெராக்ஸ் நகல் (பக்கம் 1 மற்றும் 2 மட்டும்). 2. 15.12.2020 தேதிய டாஸ்மாக் Stock Transfer Invoice எண்.S010198565 ரூ.23,84,850/-ன் நகல் (பக்கம் 1 முதல் 6 வரை). 3. 14.12.2020 மற்றும் 15.12.2020 ஆகிய நாட்களுக்கான Daily Chitta Register நகல்

(பக்கம் 1 முதல் 10 வரை). 4. 14.12.2020 தேதிக்கான விற்பனை மற்றும் இருப்பு குறித்த விவரங்களின் பட்டியலின் நகல் (பக்கம் 1 முதல் 18 வரை). 5. 15.12.2020 தேதிக்கான விற்பனை மற்றும் இருப்பு குறித்த விவரங்களின் பட்டியலின் நகல் (பக்கம் 1 முதல் 18 வரை). 6. மாவட்ட ஆய்வுக் குழும அலுவலரின் முன்னிலையில் திரு.K.ராஜ்குமார், மேற்பார்வையாளர், திரு.சங்கர், கூடுதல் மேற்பார்வையாளர், விற்பனையாளர்களான திரு.G.செல்வகுமார், திரு.V.ராம்ராஜ், திரு.G.வெங்கடேசன், திரு.K.கிருஷ்ணமூர்த்தி மற்றும் P.G.R. Associates நிறுவனத்தின் விற்பனை பிரதிநிதி திரு.E.ஸ்ரீதர் ஆகியோரிடம் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள். மேற்படி கூட்டுத் தணிக்கை செயல்முறை ஆணையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (C.K.குமரன்) மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர், சென்னை மாவட்டம், சென்னை-1 இணைப்பு- மேற்கண்டவாறு 16.12.2020 Inspector of Police Tr.S.Senthil Kumar is instructed to register a case and investigates. Sd// V.Baskar, Deputy Superintendent of Police, Received the letter on 17.12.2020 at 10.00 hrs and registered a case in V&AC Head Quarters Cr.No.21/2020 u/s 7, 13(1) (a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 Sd//-S.SENTHILKUMAR, INSPECTOR/SIC-1, 17.02.2020. சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்புப் புலனாய்வுக் குழு-1 காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து 15.12.2020 அன்று சென்னை-42, வேளச்சேரி, விஜய் நகர், வேளச்சேரி தாம்பரம் பிரதான சாலை, ரேவல் கட்டிடம் முதல் மாடியில் இயங்கி வரும், டாஸ்மாக் எலைட் மால் ஷாப் எண்.715 என்ற கடையில் தொடங்கப்பட்ட இரு துறை கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கை.

| | |
|---|---|
| இருதுறை கூட்டுத் தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள் | 1. திரு.C.K.குமரன்,<br>மாவட்ட துணை ஆய்வுக் குழும<br>அலுவலர், சென்னை மாவட்டம், சென்னை-1.<br><br>2. திரு.V.பாஸ்கரன்,<br>காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு-1,<br>ஊழல் தடுப்பு மற்றும்<br>கண்காணிப்புத்துறை, சென்னை-16. |

| | |
|---|---|
| | 3. திரு.S.செல்வக்கண் டேவிட்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக் குழு-1,<br>ஊழல் தடுப்பு மற்றும்<br>கண்காணிப்புத்துறை, சென்னை-16.<br><br>4. திரு.K.வேணுகோபால்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக் குழு-1,<br>ஊழல் தடுப்பு மற்றும்<br>கண்காணிப்புத்துறை, சென்னை-16.<br><br>5. திருமதி.S.மலர்கொடி,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக் குழு-1,<br>ஊழல் தடுப்பு மற்றும்<br>கண்காணிப்புத்துறை, சென்னை-16.<br><br>6. திருமதி.J.கிறிஸ்டி,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக் குழு-1,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |

சென்னை-42, வேளச்சேரி, விஜய் நகர், வேளச்சேரி தாம்பரம் பிரதான சாலை, கதவு எண்.40-41, ரேவல் கட்டிடம் முதல் மாடியில் இயங்கி வரும் டாஸ்மாக் எலைட் மால் ஷாப் எண்.715 என்ற கடையில் பொது மக்களுக்கு விற்கப்படும் மதுபானங்களை அரசு நிர்ணயித்துள்ள விலையை விட கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுப் பிரிவு-1 அலுவலகத்திற்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில், சென்னை மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் திரு.C.K.குமரன் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வுப் பிரிவு-1 தனது அணியினருடன், வேளச்சேரியிலுள்ள டாஸ்மாக் எலைட் மால் ஷாப் எண்.715 என்ற கடைக்கு சுமார் 21.00 மணிக்கு கூட்டுத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. டாஸ்மாக் எலைட் மால் ஷாப்

எண்.715 கடையானது முதல் மாடியில் மேற்கு நோக்கிய வாசலுடன் அமைந்துள்ளது. கடைக்குள் நுழைந்தவுடன் மேற்கு நோக்கி இரண்டு மேஜைகளுடன் கூடிய இருக்கைகள் உள்ளன. அவ்விருக்கைகளின் அருகில் டாஸ்மாக் எலைட் கடையின் மேற்பார்வையாளர் திரு.K.ராஜ்குமார் மற்றும் கூடுதல் மேற்பார்வையாளர் திரு.சங்கர் ஆகியோர் நின்று கொண்டிருந்தனர். மேலும் கடையில் விற்பனையாளர்கள் திரு.G.செல்வகுமார், திரு.V.ராம்ராஜ், திரு.G.வெங்கடேசன் மற்றும் திரு.K.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் பணியில் இருந்தனர். மேற்படி நபர்களின் பெயர்களை வருகைப் பதிவேட்டில் சரிபாரத்த போது, அவர்கள் பணிக்கு வந்ததற்காக கையொப்பமிட்டிருந்தனர். வருகைப் பதிவேட்டின்படி விற்பனையாளர்கள் திருவாளர்கள் T.குமார், K.கணேசன், M.காமராஜ மற்றும் M.பரந்தாமன் ஆகியோர் பணியில் இல்லை. இவர்கள் நால்வரும் விடுப்பிற்கான கடிதம் ஏதும் அளிக்காமலும், பணிக்கும் வரவில்லை. இவ்வலுவலகத்தில் விடுப்பு பதிவு செய்வதற்கான எந்த பதிவேடும் பராமரிக்கப்படவில்லை. மேற்படி நபர்களைத் தவிர யுனைடெட் ப்ரீவரிஸ் கம்பெனியின் ஏஜென்ஸியான கீழ்ப்பாக்கத்திலுள்ள P.G.R. அசோசியேட்ஸ் என்ற தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த விற்பனை பிரதிநிதி திரு.E.ஸ்ரீதர், வயது 43/2020, த/பெ. ஏ.ஏழுமலை (லேட்) என்பவரும் கடையில் இருந்தார். மேற்படி நபர்களை சோதனையிட்டதில், மேற்பார்வையாளர் திரு.ராஜ்குமாரிடம் ரூ.915/-, விற்பனையாளர்கள் திரு.ஜி.வெங்கடேசனிடம் ரூ.2,480/-, திரு.கே.கிருஷ்ண மூர்த்தியிடம் ரூ.1,630/-, திரு.ஜி.செல்வக்குமாரிடம் ரூ.600/- மற்றும் திரு.வி.ராம்ராஜிடம் ரூ.760/- ஆகிய தொகைகள் வைத்திருந்தனர். விசாரித்த போது அவர்கள் அனைவரும் தங்களுடைய செலவுக்காக மேற்படி பணத்தை எடுத்து வந்திருந்ததாக கூறியதால், மேற்படி தொகைகளை அவர்கள் வசமே திரும்பவும் வழங்கப்பட்டது. இக்கடையில் ஊழியர்கள் பணிக்கு வரும்போது தாங்கள் எவ்வளவு பணம் கொண்டு வருகிறார்கள் என்பதை பதிவு செய்வதற்கான எந்த பதிவேடும் பராமரிக்கப்படவில்லை. P.G.R. அசோசியேட்ஸ் நிறுவனத்தின் விற்பனை பிரதிநிதி திரு.E.ஸ்ரீதர் என்பவரை விசாரித்த போது, அவரிடம் ரூ.500/- தொகை வைத்திருப்பதாக கூறி ஆஜர் செய்தார். இத்தொகை குறித்து அவரை கேட்ட போது தான் மார்க்கெட்டிங் லைனில் செல்லும் போது செலவழிப்பதற்காக வைத்திருந்ததாக கூறியதால், மேற்படி ரூ.500/- பணத்தை திரு.E.ஸ்ரீதர் அவர்களிடமே திரும்ப வழங்கப்பட்டது. இந்த கடைக்கு அவருடைய நிறுவனம் மூலமாக யுனைடெட் ப்ரீவரிஸ் கம்பெனியின் குளிர்சாதனப் பெட்டி வழங்கப்பட்டுள்ளதால், அந்த பெட்டியில் அவர்களுடைய தயாரிப்புகளை அடுக்கி வைப்பதற்காகவும், சரியாக கடையில் தயாரிப்புகளை வாடிக்கையாளர்களை கவரும்படி பார்வைக்கு வைத்திருக்கிறார்களா என்பதை பார்ப்பதற்காகவும் வந்ததாக தெரிவித்தார். 14.12.2020 அன்று இறுதி இருப்பாக

இருந்த குடிபானங்களின் மதிப்பு ரூ.1,63,44,690/- என்று பொறுப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டும், 14.12.2020 இறுதி கையிருப்பு ரொக்கத் தொகை ரூ.40/- இருப்பதாக தின சிட்டா பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. 15.12.2020 தேதிய டாஸ்மாக் Stock Transfer Invoice எண்.S010198565 மூலம் ரூ.23,84,850/- மதிப்புள்ள குடிபானங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 15.12.2020 தேதியில் தொடக்க இருப்பாக உள்ள குடிபானங்களின் மதிப்பு ரூ.1,63,44,690/- மற்றும் இன்வாய்ஸ் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட குடிபானங்களின் மதிப்பு ரூ.23,84,850/- ஆகியவற்றின் கூட்டு மதிப்பு ரூ.1,87,29,540/- ஆகும். இத்தொகையிலிருந்து 15.12.2020 தேதியில் குடிபானங்களின் இறுதிக் கையிருபபை கணக்கிட்டதில் ரூ.1,81,31,330/- கழித்ததில் அன்றைய தின மொத்த விற்பனைத் தொகை ரூ.5,98,210/- ஆகும். இதிலிருந்து 15.12.2020 தேதியில் இரண்டு POS மிஷின்கள் மூலமாக முறையே ரூ.2,16,560/- (ICICI POS Machine TID No.33815833 and MID No.470000095436174) மற்றும் ரூ.1,25,590/- (ICICI POS Machine TID No.63054369 and MID No.470000050884395) மொத்தம் ரூ.3,42,150/- தொகையை கழித்து, தொடக்க கையிருப்பு ரூ.40/-ஐ சேர்த்தால், ரொக்கக் கையிருப்பு ரூ.2,56,100/- இருக்க வேண்டும். ஆனால் மேற்பார்வையாளர் திரு.ராஜகுமார் விற்பனை செய்து வைத்திருந்த ரொக்கப் பணத்தை கணக்கிட்ட போது அதில் ரூ.1,69,260/- (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து இருநூற்று அறுபது) மட்டுமே இருந்தது. இத்தொகையின் விவரங்கள் கீழ்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

| Sl No | நோட்டுக்களின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1. | 2,000 x 4 . | 8,000 |
| 2. | 500 x 285 | 1,42,500 |
| 3. | 200 x 48 | 9,600 |
| 4. | 100 x 57 | 5,700 |
| 5. | 50 x 23 | 1,150 |
| 6. | 20 x 30 | 600 |
| 7. | 10 x 87 | 870 |
| 8. | Coins: Rs.5 x 168 | 840 |
| | **Total** | **1,69,260** |

கையிருப்பில் இருக்க வேண்டிய மொத்த ரொக்கத் தொகை ரூ.2,56,100/-லிருந்து மேற்பார்வையாளர் கைவசமிருந்த ரொக்கத் தொகை ரூ.1,69,260/-யை கழித்தால், மொத்தம் ரூ.86,760/- ரொக்கப் பணம் குறைவாக காணப்பட்டது. பணம் குறைவாக உள்ளது குறித்து மேற்பார்வையாளர் திரு.K.ராஜ்குமார் அவர்களை விசாரித்த போது, அவரால் பதில் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார். அதனால் மேற்படி பணம் ரூ86,760/-ஐ பணத்தை தவறான முறையில் திரு.ராஜ்குமார் செலவழித்திருக்கலாம் என கருத வாய்ப்புள்ளது. பணியிலிருந்த மற்ற பணியாளர்களிடம் மேற்படி குறைவுத் தொகை குறித்து கேட்க, அவர்களுக்கு அது பற்றி எதுவும் தெரியாது என்று தெரிவித்தனர். மேற்படி கூட்டுத் தணிக்கையின் போது பின்வரும் ஆவணங்களின் நகல்கள் மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலரின் அத்தாட்சி பெற்று மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. 1. பணியாளர் வருகைப் பதிவேட்டின் டிசம்பர் 2020 மாதத்திற்கான ஜெராக்ஸ் நகல் (பக்கம் 1 மற்றும் 2 மட்டும்). 2. 15.12.2020 தேதிய டாஸ்மாக் Stock Transfer Invoice எண். S010198565 ரூ.23,84,850/-ன் நகல் (பக்கம் 1 முதல் 6 வரை). 3. 14.12.2020 மற்றும் 15.12.2020 ஆகிய நாட்களுக்கான Daily Chitta Register நகல் (பக்கம் 1 முதல் 10 வரை). 4. 14.12.2020 தேதிக்கான விற்பனை மற்றும் இருப்பு குறித்த விவரங்களின் பட்டியலின் நகல் (பக்கம் 1 முதல் 18 வரை). 5. 15.12.2020 தேதிக்கான விற்பனை மற்றும் இருப்பு குறித்த விவரங்களின் பட்டியலின் நகல் (பக்கம் 1 முதல் 18 வரை). மேற்படி அசல் ஆவணங்கள் மேற்பார்வையாளர் திரு.ராஜகுமார் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்பார்வையாளர் திரு.K.ராஜ்குமார், கூடுதல் மேற்பார்வையாளர் திரு.சங்கர், விற்பனையாளர்கள் திரு.G.செல்வகுமார், திரு.V.ராம்ராஜ், திரு.G.வெங்கடேசன், திரு.K.கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு.E.ஸ்ரீதர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலரின் முன்னிலையில் பதியப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் தணிக்கை 16.12.2020 காலை சுமார் 11.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம்// (C.K.குமரன்), மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், சென்னை மாவட்டம், சென்னை-1.

ஒப்பம்// (வா.பாஸ்கரன்), காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, , சென்னை.

ஒப்பம்// (S.செல்வக்கண் டேவிட்) காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.

ஒப்பம்// (K.வேணுகோபால்), காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.

ஒப்பம்// (S.மலர்கொடி), காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16..

ஒப்பம்// (J.கிறிஸ்டி), காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை.

Submitted to the Honorable Special Judge, Prevention of Corruption Act Cases, Chennai.

17.12.2020

(S.செந்தில்குமார்)
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வுக்குழு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.